செ.வெ.எண். 142 நாள்.05.03.2018.

**திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.4.16 இலட்சம் மதிப்பில் 11 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் வழங்கினார்.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று (05.03.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து மின் விபத்தில் உயிரிழந்த இராதாபுரம் வட்டம் பழவூரைச் சேர்ந்த சாமுவேல் நபரின் குடும்பத்திற்கு ரூ.3 இலட்சத்திற்கான காசேலையினையும், நீரில் மூழ்கி உயிரிழந்த திசையன்விளையைச் சார்ந்த திருமலை நம்பி நபரின் குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும், பாம்பு கடித்து உயிரிழந்த திருவேங்கடம் வட்டம், பழங்கோட்டை சார்ந்த 5 வயது சிறுவன் அன்பழகன் குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ரூ.4 ஆயிரம் மதிப்பில் விலையில்லா தேய்ப்பு பெட்டிகள் 2 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நாங்குநேரி வட்டத்தைச் சார்ந்த 3 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், 2 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், ஒரு பயனாளிக்கு கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை பிரதி மாதம் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.ராமசுப்பிரமணியன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியக்கோட்டி, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் திரு.சிவகுமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.